தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சார்வரி, தை 23, திருவள்ளுவர் ஆண்டு–2052

2021 பிப்ரவரி 5, வெள்ளிக்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00* மணியளவில் *பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தற்கு இயல்பு.”

பயம் இல்லாமல் இருத்தல், ஏழைக்கு கொடுக்கும் கொடை, சிறந்த அறிவு, மிகுந்த ஊக்கம், இந்த நான்கினையும் குறையில்லாமல் நிறைவாகப் பெற்றிருப்பவர் சிறந்த ஆட்சியாளர் ஆவார்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அமைச்சர் அவர்கள்.*

11—

துணை மின் நிலையம்

***13558—திரு. என். முருகுமாறன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2021 பிப்ரவரி 5

(அ) காட்டுமன்னார்கோவில் தொகுதி, பாளையங்கோட்டை ஊராட்சியிலுள்ள 33 K.V. துணை மின் நிலையத்தை 110 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(ஆ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய காட்டுமன்னார்கோவில் தொகுதி, பாளையங்கோட்டை ஊராட்சியிலுள்ள 33 K.V. துணை மின் நிலையத்தை 110 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டுமென்று கேள்வி எழுப்பியுள்ளார்கள். இப்போது அங்கு மின்பளு குறைவாக உள்ள காரணத்தினால், எதிர்காலத்தில் தேவை ஏற்படின், அது மாற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்டை மாநிலம் தொடங்கி, அயல் நாடு வரை அகிலமே வியக்கிறது! அம்மாவின் தமிழகமே, அன்னை தேசத்தின் முதலிடம்! என்று. (மேசையைத் தட்டும் ஒலி) அச்சம் தவிர்த்து அரசியல் எதிரிகளின் உச்சந்தலையில் ஆணி அடித்தவர் நம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்! இரண்டு கோடி தொண்டர்களின் இதயத் துடிப்பாய்! ஊனில், உயிரில், உணர்வில், உதிரத்தில் ஒன்றெனக் கலந்து யாதுமாகி நிற்கின்ற தாயே! 12 கோடி தமிழரும் பண்புடனே மறக்காமல் இன்று உச்சரித்துக் கொண்டிருக்கும் ஒரே மந்திரம் அம்மா எனும் திருமந்திரம்! (மேசையைத் தட்டும் ஒலி) வங்கக் கடலோரம் துயில்கொள்ளும் தங்கத் தலைவர்! கொடுத்து, கொடுத்து, சிவந்த கரங்களின் சொந்தக்காரர், மாசற்ற மக்கள் தலைவர், மன்னாதி மன்னர், பொன்மனத் தலைவர், பாரத ரத்னா புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அருகில் இருந்து தமிழகத்தை இன்றும் கண்மூடி காத்துவரும் கருணைக் கடலே! கழகக் காவல் தெய்வமே, எங்கள் வாழ்வில் வசந்தத்தை நாளும் ஏற்படுத்திய, ஏழைகளின் ஏந்தலே! எங்களை வாழவைத்த

2021 பிப்ரவரி 5]

தெய்வமே, புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தங்கள் பொன்னடிகளைப் போற்றி, நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி முதற்கண் பணிவோடு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்த் தாயின் தலைமகனாய்! தவசித் தாயின் தவப் புதல்வராய்! சாதனைகளின் தொகுப்பாய்! சரித்திரத்தின் மறுபதிப்பாய்! தீய சக்திகளுக்கு அரசியலில் சுடும் நெருப்பாய்! நிலையான ஆட்சி, நிரந்தர வளர்ச்சி (மேசையைத் தட்டும் ஒலி) *என புதியதோர் உலகம் செய்ய புறப்பட்ட போர்வாளே! புறநானூற்று கூர்வேளே! புரட்சித் தலைவி அம்மா வழிநின்று, ஆட்சியை, கட்சியைத் திறம்பட நடத்தி, எதிரிகளின், உதிரிகளின் சூழ்ச்சிகளை வீழ்த்தி, அன்னை இலட்சிய தீபத்திற்கு தன்னையே எண்ணெயாய்த் தந்திட்ட, தரணி போற்றும் ஒப்பற்ற தமிழக முதல்வரே! கழகத்திற்கு உரமாய், ஆட்சிக்கு வரமாய் இருக்கும் வெள்ளை மனதிற்குச் சொந்தக்காரர்!* (மேசையைத் தட்டும் ஒலி) *முக்கடல் சூழ்ந்த பாரதத்தில் மூன்றில் இருபங்கு விருதினை இனிதே பெற்று, தரணியில் தாய்த் தமிழகமே முதலிடம் என உயர்த்திய சிங்கநிகர் தலைவர்,* (மேசையைத் தட்டும் ஒலி) *சிலுவம்பாளையம் தந்த கொள்கை வீரர்! காவலர்களுக்கெல்லாம் காவலர்! கண்ணியத்திற்குரிய காவல் துறையின் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களே, தங்களை மிகுந்த அன்போடு வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய யோசித்து, நிதானமாகச் செயல்பட்டு, ஏழையெளியோரை ஏற்றிவிடும் ஏணியாக, கழகத்தை கரைசேர்க்கும் தோணியாக, தருமனுக்கு துணை நின்ற கண்ணனைப் போல, அண்ணன் எடப்பாடியாருக்கு துணை நிற்கும் துணை முதல்வரே! கழகத்தை மீட்டு, கட்சியைக் காத்து, இரட்டை இலை சின்னத்தைப் பெற துணை நின்ற, வெள்ளிச் சிரிப்புக்கு சொந்தக்காரரே! நெற்றியில் நீரும், நீண்ட குங்குமமும், கையில் கயிறும், வெள்ளை கிருதாவும், உங்களின் அடையாளம், நீங்களே கழகத்தின் அடையாளம்! மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களே, தங்களை மிகுந்த அன்போடு வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணல் வழிநடந்து, அம்மாவின் விழி அசைவில் மலர்ந்து, கண்ணியத்தை நிலைநாட்ட கருத்துகளை மோதவிட்டு, கனிவோடும்,

கம்பீரத்தோடும், சபையை நடத்தும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தங்களை மிகுந்த பணிவோடு வணங்குகின்றேன்.

முற்பகல் 10–05

மின்னலை விழுங்கி, மின்சாரத்தைக் கொப்பளிக்கின்ற ஆற்றல் மிகுந்த மாண்புமிகு தமிழ்நாடு மின்சாரத் துறை அமைச்சர் எங்கள் போற்றுதலுக்குரிய அண்ணன் மாண்புமிகு திரு. பி. தங்கமணி அவர்களை அன்போடு வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் தொகுதி என்பது ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்கள் அதிக அளவில் வசிக்கக்கூடிய பின்தங்கிய தொகுதி. இந்தத் தொகுதியில் இருக்கக்கூடிய பாளையங்கோட்டை ஊராட்சியிலுள்ள 33 K.V. துணை மின் நிலையத்தை 110 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று 2016–ல் கொடுக்கப்பட்ட வினா இன்றைக்கு 2021–ல் வந்திருக்கின்றது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தின் தேவைக்கேற்ப, மின்பளுவைக் கருத்தில்கொண்டு தரம் உயர்த்தித் தரப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். எதிர்காலத்தில் பாளையங்கோட்டை ஊராட்சியில் உள்ள 33 K.V. துணை மின் நிலையத்தை 110 K.V. துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். காட்டுமன்னார்கோவில் தொகுதியில் சோழத்தரம், எசனூர் ஆகிய இரண்டு ஊராட்சிகளில் 33/11 K.V. துணை மின் நிலையம் வேண்டுமென்று நம்முடைய துறை சார்ந்த அலுவலர்களும் சொல்கின்றார்கள்; மக்களும் சொல்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைக் கனிவோடு பரிசீலனை செய்து அங்கே 33/11 K.V. துணை மின் நிலையத்தை அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அவரவர் பகுதிகளில் துணை மின் நிலையம் வேண்டும் என்று

2021 பிப்ரவரி 5]

கேட்கின்றார்கள். பொதுவாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் கடந்த காலத்தில் இருந்ததைக் காட்டிலும் இரு மடங்கு துணை மின் நிலையங்கள் அதிகமாக அமைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் வந்ததற்குப் பின்னால், கடந்த நான்காண்டு காலத்தில் எங்கே துணை மின் நிலையம் தேவையோ, எங்கே மின்னழுத்தம் அதிகமாக இருக்கின்றதோ, அங்கெல்லாம் உடனடியாக அமைக்க வேண்டும் என்று அண்ணன் அவர்கள் சொல்லி, இப்போது தேவையான இடங்களில் நாங்கள் அதனை அமைத்துக் கொண்டிருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இரண்டு ஊராட்சிகளிலும் துணை மின் நிலையங்கள் வேண்டும் என்று கேட்டிருக்கின்றார். அந்தப் பகுதி முழுக்க முழுக்க விவசாயம் நிறைந்த பகுதி; அங்கு இருக்கின்ற துணை மின் நிலையங்களிலே இப்போது மின்பளு குறைவாகத்தான் இருக்கின்றது. இருந்தாலும், அந்த இரண்டு ஊராட்சிகளில் மின்பளு எந்த அளவுக்கு இருக்கின்றது என்பதை அதிகாரிகளோடு ஆய்வு செய்து, தேவையிருப்பின் அதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

திரு. என். முருகுமாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழத்தரம் மற்றும் எசனூர் ஊராட்சிகளில் 33/11 K.V. துணை மின் நிலையத்தை அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று தேவையிருப்பின் அமைத்துத் தரப்படும் என்ற பதிலை அளித்த போற்றுதலுக்குரிய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் 2011–ல் சட்டப் பேரவைக்கு வருகின்றபோது தமிழகம் இருண்ட மாநிலமாக இருந்தது. இருண்ட மாநிலமாக இருந்த தமிழகத்தை ஒளி மிகுந்த மாநிலமாக மாற்றிக் காட்டிய ஒப்பற்ற தலைவி மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழியில் தடம் மாறாமல்

ஆட்சியை நடத்தி, எதிர்க்கட்சிகள் மட்டுமல்ல, இந்திய தேசத்தில் இருக்கக்கூடிய அனைத்துக் கட்சிகளும் நம்முடைய தமிழ் தேசத்தை உற்று நோக்குகின்ற அளவிற்கு– 'தானே புயல்' என்று சொன்னாலும் சரி அல்லது 'நிவர் புயல்' என்று சொன்னாலும் சரி, மின் கம்பம் சாய்ந்த மாத்திரத்தில் மின் கம்பத்தை நட்டு மின்சார வசதியை ஏற்படுத்தக்கூடிய–கட்டமைப்பை மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்கள் இன்றைக்கு தமிழகத்தில் உருவாக்கித் தந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் வழிநடத்திக்கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த நன்றியினை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

காட்டுமன்னார்கோவில் தொகுதி, முட்டம் ஊராட்சியில் ஒரு பிரிவு அலுவலகம் (Section Office) இருக்கின்றது. அதற்குரிய கட்டடம் தற்போது பெய்த மழை வெள்ளத்தின் காரணமாக இடிந்து விழக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றது. தற்போது அந்த அலுவலகம், மாற்று இடத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. கனிவு உள்ளத்தோடு, தாய் உள்ளத்தோடு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று அங்கே ஒரு புதிய கட்டடத்தை உருவாக்கித் தருவதற்கு மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருக்கின்றது; அலுவலகக் கட்டடம் இடிந்துவிழும் சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தினால், வாடகைக் கட்டடத்திற்குச் சென்றிருக்கின்றார்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். அங்கே உடனடியாக மாற்றுக் கட்டடம், அதாவது புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்கு இந்த 2017 முதல் 2022 வரையிலான இந்த ஐந்தாண்டுக் காலத்தில், கடலூர் மாவட்டத்தில் மொத்தம் 34 துணை மின் நிலையங்களை

2021 பிப்ரவரி 5]

அமைக்கயிருக்கின்றோம். அந்த 34 துணை மின் நிலையங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட அந்தப் பகுதிகளில் தேவையிருப்பின் உடனடியாக அவற்றைச் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். அதுமட்டுமல்ல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னால், இந்த நான்கு ஆண்டுக் காலத்தில் மட்டும் சரித்திரத்தில் பொறிக்கின்ற அளவிற்கு 21 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்ட மாவட்டம் கடலூர் மாவட்டம் என்பதை நான் இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையை, தேவையிருப்பின் இந்த ஐந்தாண்டுக் காலத் திட்டத்தில் முன்னுரிமை கொடுத்து, அந்த இரண்டு ஊராட்சிகளுக்கும் துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.*

திரு. ஆர். நடராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்ட இடத்தை புனித நினைவிடமாக மாற்றியதற்கும், அம்மா அவர்கள் வாழ்ந்து, கோலோச்சிய வேதா நிலையத்தை புனித நினைவில்லமாக அமைத்து, அம்மாவின் பிரிவால் வாடும் இலட்சோபலட்சம் மக்களின் ஆற்றாமையைத் தணித்ததற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் இதயமார்ந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.*

மேதகு ஆளுநர் உரையில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதில் நாட்டில் தமிழ்நாட்டிற்கு முதலிடம் என்று சிறப்பாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. பெண்கள் பாதுகாப்பில் சென்னைக்கு முதலிடம்; பெண்கள் பாதுகாப்பிற்கு தோழி என்ற செயலி திட்டம். Amma Patrol *சிற்றுந்து திட்டம் ஆகிய திட்டங்களால் இது சாத்தியமாயிற்று. சாலைப் பாதுகாப்பில் உயிரிழப்புகளைக் குறைத்ததற்கு மத்திய அரசின் விருதைப் பெற்றதற்கு எனது இதயமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

Traffic Management–ஐ உள்ளடக்கிய Enforcement, Engineering, Education என்பதோடு Empowerment என்ற நான்காவது E–ஐயும் சேர்த்து மக்களை இணைத்து சாலைப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டதால், 17,218 ஆக இருந்த உயிரிழப்பிற்குக் காரணமான விபத்துகளின் எண்ணிக்கையை 8,060 ஆகக் குறைத்து, உயிர்களைக் காப்பாற்றிய சாதனை, மிகப் பெரிய சாதனை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின்கீழ் சிறப்பாகச் செயல்படும் காவல் துறைக்கு என்னுடைய இதயமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழிப்பாட்டுத் தலங்களில் புனிதமான தலம்; மயிலையில் கயிலை என்று போற்றப்படும் மயிலாப்பூர். குடியிருப்புகள் நெருக்கமாக அமைந்துள்ள சாலைகள் மற்றும் பல இடங்களில் மின் மாற்றிகள் பழுதடைந்த நிலையில் உள்ளன. முக்கியமாக மந்தைவெளி, ரங்கா ரோடு, வாரன் ரோடு, மாட வீதிகள் போன்ற அணுகு சாலைகளில் உள்ள மின்மாற்றிகள் மின்னழுத்த வேறுபாடு காரணமாக பொறி (spark) அபாயகரமான முறையில் ஏற்படுகிறது. அதனை உடனடியாகச் சரி செய்துவிடுகிறார்கள். ஆனால், அத்தகைய பழுதடைந்த மின்மாற்றிகளை மாற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். 2017 ஆம் ஆண்டில் அம்மாவின் ஆணைக்கிணங்க பழுதடைந்த 5,000–க்கும் மேற்பட்ட PillarBox–கள் மாற்றப்பட்டன. அதேபோல், இதற்கும் சிறப்புத் திட்டம் வகுத்து, மாற்ற நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். வரப்போகும் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று மே மாதம் எடப்பாடியார் தலைமையில் அமையப்போகும் அம்மாவினுடைய அரசின் சிறப்புத் திட்டமாக இதனைச் செயல்படுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மயிலாப்பூர் பகுதியில் பழுதடையும் மின்மாற்றிகளை உடனடியாகச் சரி செய்துவிடுகிறார்கள்; இருந்தாலும், புதிய மின்மாற்றிகள் அமைக்க வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் இருக்கின்றபோதே, வெள்ளம் மற்றும் புயல்

2021 பிப்ரவரி 5]

போன்ற இயற்கைப் பேரிடர் காலங்களில் ஏற்படும் பாதிப்பைக் கருத்தில்கொண்டு, சென்னை மாநகரம் முழுவதும் இருக்கின்ற pillar box–*களையெல்லாம் உயரப்படுத்த வேண்டும் என்று சொன்னார்கள். தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களும் அதற்கு ஆணையிட்டு, இப்போது கிட்டத்தட்ட 90 சதவிகிதப் பணிகள் முடிந்திருக்கின்றன. மின்மாற்றிகளைப் பொறுத்தவரை, அவற்றிற்கு* warranty *இருக்கின்றது. அதாவது ஓராண்டுக் காலம், மூன்றாண்டுக் காலம் என்று இருக்கிறது. அதற்குள் பழுது ஏற்பட்டால், அந்த* company–*யினரே அதனைச் சரி செய்து கொடுத்துக்கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற மின்மாற்றிகள் நிறுவி நீண்ட நாட்கள் ஆகின்ற காரணத்தால் அவற்றைப் புதிதாக மாற்ற வேண்டும் என்று சொன்னால், அரசு அதிகாரிகளோடு அதனை ஆய்வு செய்து, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.*

திரு. ஓ.கே. சின்னராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமல் மக்கள் மனதிலே நீக்கமற வாழ்ந்துக்கொண்டிருக்கின்ற இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். விவசாயிகளினுடைய விடிவெள்ளி, அத்திக்கடவு–அவிநாசித் திட்டம் தந்து, விவசாயிகளினுடைய வாழ்விலே பால் வார்த்த விவசாயிகளினுடைய தோழன் மரியாதைக்குரிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். மேலும் மாண்புமிகு முதலமைச்சருக்கு உறுதுணையாக இருந்து ஆட்சியையும், கட்சியையும் சிறப்பாக வழிநடத்திக் கொண்டிருக்கின்ற மனித நேயமிக்க பண்பாளர், மரியாதைக்குரிய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். ஓய்வறியா உழைப்பாளி இளைஞர்களினுடைய எழுச்சி நாயகனாக செயலாற்றி, 50 ஆண்டுக் காலம் செய்ய வேண்டிய திட்டங்களை ஐந்தே ஆண்டுக் காலத்தில் முடித்துத் தந்திருக்கின்ற எங்களுடைய கொங்கு மண்டல தளபதி, மரியாதைக்குரிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களையும் வணங்குகிறேன்.*

காரமடை ஒன்றியம், சிக்காரம்பாளையம் ஊராட்சி, வடவள்ளி பகுதியில் 110 KV *துணை மின் நிலையம் அமைப்பதற்கு*

இடம் தேர்வு செய்யப்பட்டு, நிலம் கையகப்படுத்தும் பணி நடந்து வருகிறது. நிலம் கையகப்படுத்தியதற்குண்டான கிரையத் தொகை இன்னும் வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அந்த இடத்தை விரைந்து கையகப்படுத்தி, இந்த ஆண்டிலேயே துணை மின் நிலையம் அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார்கள். நில மதிப்பீட்டிற்காக வருவாய்த் துறைக்கு file வந்திருக்கும் என்று நினைக்கிறேன். எங்களுக்கு இன்னும் வரவில்லை. அந்த file–ஐ கேட்டு பெற்று, உடனடியாக அந்த நிலத்தைக் கையகப்படுத்தி துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பிரபு அவர்கள்.

திரு. அ. பிரபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். எளிய தொண்டனான என்னை நேற்று முன்தினம் புரட்சித் தலைவி அம்மா பேரவையிலே மாநில இணைச் செயலாளராக நியமித்து கழகப் பணியாற்றிட வாய்ப்பளித்த மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஆகியோரைப் பணிந்து வணங்குகிறேன். எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த தமிழகத்தின் மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களையும் இந்த நேரத்தில் வணங்குகிறேன். எங்களது மாவட்டச் செயலாளர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021 பிப்ரவரி 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு துணை மின் நிலையம் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சரிடத்தில் மனுக்களை வழங்கி, அதற்குத் தேவைப்படும் நிலமும் பெருங்கூர் ஊராட்சியிலே தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. தெரிவு செய்யப்பட்ட இடத்திலே உடனடியாக ஒரு துணை மின் நிலையம் அமைத்து தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்த இடத்திலே 3¾ ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றது. 110/22 K.V. துணை மின் நிலையம் அமைப்பதற்குண்டான ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டிருக்கின்றன. விரைந்து அந்தப் பணிகள் முடிந்து, வேலைகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 12, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பழனி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

12—

தார்ச்சாலை

***3043—திரு. கே. பழனி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, குன்றத்தூர் ஒன்றியம், மலையம்பாக்கம் தெருக்களில் சிமெண்ட் சாலை அல்லது தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?